ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2138/42 - 2019 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2019.08.30

*2138/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் செய்யப்படும் அறிவித்தல்

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவின்படி வெளியிடப்படுகின்ற விதித் தொடர்கள்.*

வடமேல் மாகாணப் பாடசாலைப் பணி உதவியாளர்களுக்காக, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபைச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவின்படி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விதித் தொடரினை வெளியிடுவதுடன், 2019.09.01 ஆந் திகதி தொடக்கம் இவ் விதித் தொடர் நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

பேஷல ஜயரத்ன பண்டார,
வடமேல் மாகாண ஆளுநர்.

2019, ஓகத்து 26.

### வடமேல் மாகாணப் பாடசாலைப் பணி உதவியாளர்களுக்கான விதித் தொடர்

1. பாடசாலைப் பணி உதவியாளர்கள் கடமைக்கு வருகை தரும் நேரம் மு.ப. 7.00 மணியாகவும், வெளியேறும் நேரம் பி.ப. 3.45 மணியாகவும் இருக்க வேண்டும். என்றாலும், பாடசாலை முடிந்த பின்பு வேறு விசேட கடமைகள் ஏதும் இல்லை என்றால் பாடசாலையில் இருந்து வெளியேறலாம்.

2. 01 மணி 30 நிமிடங்கள் குறுகிய விடுமுறையினை மு.ப. 7.00 மணி தொடக்கம் மு.ப. 8.30 மணி வரை அல்லது பி.ப. 2.15 மணி தொடக்கம் பி.ப. 3.45 மணி வரையிலும் கடமைக்கு எவ்வித தடங்களும் இன்றி மதிய உணவிற்கு முன் அல்லது பின்பு 01 மணி 30 நிமிடங்களாக அமைதல் வேண்டும்.

3. அரை நாள் விடுமுறை மு.ப. 11.00 மணி வரை 04 மணி நேரம் அல்லது மு.ப. 11.45 மணி தொடக்கம் 04 மணி நேரமாகவோ அமைதல் வேண்டும்.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4. ஏனைய விடுமுறைகள் பற்றி தாபனக் கோவையில் அல்லது உரிய சுற்றுநிருபப்படி அமைதல் வேண்டும்.

5. பாடசாலை விடுவிப்பின் பின்பு அல்லது பாடசாலை விடுமுறை நாட்களில் பெண் பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படும் போது அதிபர் அவர்களினால் கட்டாயமாக இன்னொரு பெண் பணியாளர் ஒருவர் அல்லது ஆசிரியை ஒருவரை இச் சந்தர்ப்பத்திற்காக வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

6. பாடசாலை சுற்றாடலுக்கு உகந்த வகையிலும் தெளிவாகவும் ஆண் பணியாளர்கள் காற்சட்டையும் மேற்சட்டையுடனும், பெண் பணியாளர்கள் சாறியினை அணிந்தும் கடமைக்கு வருகைத் தருதல் வேண்டும்.

7. அலுவலக நடவடிக்கைகளுக்கு உதவி புரிவதற்காக அதிபரினால் பணியாளர்களுக்கு கடமைகளை ஒப்படைத்தல் வேண்டும்.

8. மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் வேண்டும்.

09-471

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.